பக்கங்கள்: ஆறு

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 22 வெள்ளிக்கிழமை (6-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ்: 251

# உண்ணாவிரதத்தை கைவிட கோரி ஹமில்டன் வனசிங்கா செய்தி

## எனினும் நீர் அருந்தி தொடரப்படும்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

யுத்தக் கைதிகளை அவர்களது உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு, கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் செய்தி அனுப்பினார்

எனினும் யுத்தக் கைதிகள் தமது உண்ணாவிரதத்தைத் தொடர்கிறார்கள். ஹமில்டனின் கடிதத்துக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அவர்கள் நேற்று நீரை மட்டும் அருந்த ஆரம்பித்தனர்.

உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு கேட்டு, ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா எழுதிய கடிதம் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஆக. 6

செட்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் காவலரண் மீது நடந்த ஞாயிறன்று அதிகாலை விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிகமாக இணைந்துள்ள வடக்கு கிழக்கை பிரிக்க கொழும்பில் துண்டுப்பிரசுரம்

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தற்போது தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு – கிழக்கு மாகாணத்தை அவசர காலச் சட்டத்தின்கீழ் அல்லது நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் சட்டம் ஒன்றின் மூலம் உடனடியாகப் பிரிக்கவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் கொழும்பில் பிக்குகளினாலும் புத்திஜீவிகள் எனப்படுவோரினாலும் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் பெரும் மனிதக் கொலைகள் இடம்பெறும் என்றும் அத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். (இ-9)

## அரசின் புதிய நிலைப்பாட்டை அரச அதிபர் தெரிவிப்பார்

### நாளை யாழ். புறப்பட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 6

யுத்தக் கைதிகளின் விவகாரத்தில் சமரசம் ஏற்படுத்து முகமாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நாளை இங்கு வருகிறார்.

விடுதலைப் புலிகள் ஏற்கனவே விதித்துள்ள நிபந்தனையை சில மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்ள அரச தரப்பில் விருப்பம் தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் —

அதனைத் தொடர்ந்தே அவர் இங்கு வருவதாகவும் — அறியவந்தது.

யுத்தக் கைதிகளை உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் —

அது தொடர்பாகத் தாம் விரைவில் யாழ்ப்பாணம் வர இருப்பதாகவும் — திரு.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உணவில் நச்சுத் தன்மை 14 பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஆக. 6

உணவில் நச்சுத் தன்மை ஏற்பட்டதன் காரணமாக யாழ். பாதனா வைத்திய சாலையில் இரு வெவ்வேறு இடங்களில் இருந்து 14 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் அறுவர் உடுவில் மல்வம் பகுதி ஆசிரமம் ஒன்றைச் சேர்ந்தவர்கள். முதல் நாள் சமைத்த உணவை அடுத்த நாள் காலை இவர்கள் உட்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றும் 8 பேர் வட்டுக்கோட்டை துணைவியைச் சேர்ந்தவர்கள். துணைவியைச் சேர்ந்தவர்களில் மொத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹமில்டனுக்கு மதிப்பளித்தே நீர் அருந்துவதற்கு முடிவு

### யுத்தக் கைதி ஒருவர் பேட்டி

யாழ்ப்பாணம், ஆக. 6

7 ஆம் திகதி அரச அதிபர் வரும் வரை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா எம்மை கேட்டுள்ளார்; ஆயினும் நாம் உண்ணாவிரதத்தை நிறுத்தவில்லை. ஹமில்டன் வனசிங்காவின் வேண்டுகோளுக்காகவும் அதற்கு மரியாதை செலுத்துமுகமாகவும் நீர் அருந்துவதை ஆரம்பிக்க முடிவு செய்துள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மேலும் இருவர் ஆஸ்பத்திரியில்

உண்ணாவிரதிகளில் மேலும் இருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஜெயதிலகா [வயது 31], ஜே. எம். எல். சேனரட்ண [வயது 29] ஆகிய இருவருமே மயங்கிய நிலையில் வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டவர்கள் ஆவர்.

(இ-15-5-9)

## மட்டக்களப்பில் கறுப்பு உடை அணிந்த படையினர் ரோந்து

கொழும்பு, ஆக. 6

மட்டக்களப்பு பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் ரோந்து வரும் கறுப்பு உடை அணிந்த படைஅணி ஒன்றின் நடமாட்டம் அண்மை நாட்களில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் நடைபெற்ற, ஜனாதிபதி நடமாடும் செயலகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்காகவே இந்த படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை அலுவலகமுன் தற்கொலை பயமுறுத்தல்

கொழும்பு, ஆக. 6

யாழ்ப்பாணத்தில் தற்போது உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளில் எவராவது உயிரிழந்தால் கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைமை அலுவலகத்தின் முன் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக கைதிகளின் உறவினர்கள் எச்சரித்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-எ-6)

## கிளாலி—பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஆக 6

கிளாலி-பூநகரி படகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமையும் வழமையான நேரத்துக்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித் துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ-5)

## தேர்தல் ஆணையாளருக்கு எதிராக குற்றப் பிரேரணை

### இந்திய எதிர்க்கட்சிகள் அறிவிப்பு

இந்தியாவின் பிரதம தேர்தல் ஆணையாளர் டி என். ஷேஷனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் அரசியல் குற்றப் பிரேரணை கொண்டுவரப் போவதாக தேசிய முன்னணியும் இடதுசாரி முன்னணியும் நேற்று அறிவித்துள்ளன.

இந்தியாவின் தேர்தல்கள் அனைத்தையும் டிசம்பர் மாதத்துக்கு ஒத்தி வைத்ததால் பிரதம தேர்தல் ஆணையாளர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று இந்த இரு முன்னணிகளும் கோரி உள்ளன.

தமது தேர்தல் நடவடிக்கைகளில் இந்திய அரசு தலையிடுவதாக பிரதம தேர்தல் ஆணையாளர் சில தினங்களுக்கு முன் குற்றஞ்சாட்டியிருந்தார். (இ 6)

## அரியாலை நோக்கி ஷெல்

யாழ்ப்பாணம், ஆக 6

பூநகரி — கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் கிழக்கு அரியாலைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஷெல் தாக்குதலை நடத்தினர். துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. பயிராக்கவியல் / விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல் / விவசாயப் பொருளியல் / விவசாயப் பொறியியல் / மிருக விஞ்ஞானப் பேராசிரியர்.
2. விவசாய உயிரியலில் / மிருக விஞ்ஞானத்தில் / விவசாயப் பொருளியலில் / விவசாயப் பொறியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதிகாண்) / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்).
3. பயிராக்கவியலில் / விவசாய உயிரியலில் / மிருக விஞ்ஞானத்தில் செய்முறை காட்டுநர்.

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென தலைவராலும் பீடத்தலைவராலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரை அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் ரூபா 5850 - 10X260 - 8450/- (மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத் திட்டத்தில் அவரை வைக்கவும் முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு [மேல் பிரிவு] டன் சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்], ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் [தகுதிகாண்] தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சம்பள அளவுத் திட்டம் 1994-01-01 இல் இருந்தே அமுல்படுத்தப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

பேராசிரியர் —
ரூபா 15860—6X390-18,200/- (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் I
ரூபா 12480 — 8 X 325—15080/- (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II —
ரூபா 10400 — 5X 325 — 12025/- (மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (தகுதிகாண்) —
ரூபா 5850—10X260 —8450/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 5070/- மாதமொன்றுக்கு (நிலையானது)

தற்காலிகச் செய்முறை காட்டுநர் —
ரூபா 4225/- மாதமொன்றுக்கு (நிலையானது)

குறிப்பு:

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551 ஆம் இலக்க 1992 டிசம்பர் 28ஆம் திகதிய சுற்று நிருபத்திற் ஏற்ப மேற்குறித்த சம்பள அளவுத் திட்டங்கள் 1994 சனவரி 1ஆம் திகதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.
2. இத்துடன் 1994 டிசம்பர் 31 திகதிவரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25% சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993 - 10 - 29 இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993 - 9 - 10.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்ப படிவங்களையும் விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்ப படிவத்துக்கும் நிதிக் கிளையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23X10 ச. மீ. அளவுடைய கடிதஉறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

குறிப்பு:
ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

– பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
30 - 7 - 93.

(சி-5567)

## ஆலயங்களில்

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மஹாசங்கட சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கப்படும். விசேட ஆராதனைகளை அடுத்து விநாயகப் பெருமான் உள் வீதி வலம் வருவார். (த-80)

## சுதந்திரப் பறவைகள்

யாழ்ப்பாணம். ஆக. 6 விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" பத்திரிகையின் ஆவணி மாத இதழ் நாளை சனிக்கிழமை வெளிவரவுள்ளது.

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பில் மகளிர் படையணி நடத்திய வீரசாதனை பற்றிய செய்தியும், வளர்முக நாடுகளில் பெண்களும் கல்வியும், எரித்திரியப் பெண் போராளிகள், பெண்களும் விபச்சார உலகமும் ஆகிய கட்டுரைகளும் இம்மாத இதழில் வெளியாகி உள்ளன. (அ)

அன்பின்

தேவனுக்கு

தாழ்மையான

நன்றிகள்

அடியான்

[26843]

NEW SCIENCE HALL
Kannathiddy Road,
JAFFNA.

PURE — APP
MATHS

திரு. குணசிங்கம்
(B Sc Hons)

94 A/L

புதிய பிரிவு ஆரம்பம்:
07-08-1993

95 A/L
SAT. SUN. 6-00

[சி/5650]

## விளம்பரம்

கைதடி மாட்டிறைச்சிக்கடை, சந்தை 1992ஆம் ஆண்டு நடத்திய நான் திரும்பவும் 8-8-93 ஞாயிற்றுக்கிழமை முதல் மாட்டிறைச்சிக்கடையை நடத்துகிறேன் என்பதை வாடிக்கையாக இறைச்சி வாங்கியவர்களுக்கும், ஓடர் இறைச்சி எடுத்தவர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

விற்பனை நாட்கள்: புதன், சனி, ஞாயிறு

எஸ். எஸ். சோமு

இறைச்சி மாடு விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

எஸ். எஸ். சோமசுந்தரம்
வைரவர் கோவிலடி,
கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

[26839]

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லிறோட்,
யாழ்ப்பாணம்.

மீட்டல் வினா-விடை
வகுப்பு

வர்த்தகம் 94
திரு. தேவா

ஆரம்பம்:
7 - 8 - 93
காலை 10-00 மணி

(சி-5646)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சிவயோகம் பரமசாமி (குணம்)

தோற்றம்: 20-08-1933
மறைவு: 07-07-1993

எமது இல்லத்தில் விளக்கேற்றிய தீபமே! அம்மா எங்கள் கண்கண்ட தெய்வமே உன்னைப்போல் ஒரு குடும்பத் தலைவியை காண்பது அரிதிலும் அரிது. உனைநாடி எவர் வந்திடினும் மனங் கோணாது உதவிடும் உத்தமியே. உனை இழந்து தவிக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், உறவினர்கள்.

31, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(26842)

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.

பிரத்தியேக
வகுப்புக்கள்

பொருளியல்

94 மீட்டல் வினா-விடை வகுப்பு
12-30 — 2-30

95-புதிய பிரிவு
2-30 — 3-30

திரு. கலாகரன்

ஆரம்பம்:
08 08-1993

(சி-5648)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்

# சிமெந்து ஆலை ஊழியருக்கு சம்பள உயர்வு கிடைக்கும்

## புதிய தலைவர் வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஆக. 6

சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு இவ் வருடம் ஜூலை மாதம் தொடக்கம் மிகுதி நூற்றுக்கு சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும்.

இந்தச் சம்பள உயர்வை வழங்குவதாக கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் திரு. போகவிலாகம தம்மைச் சந்தித்த சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்திருக்கிறார்.

பொதுத் தொழிலாளர் சங்கத் தூதுக்குழு கடந்த மாதம் 21ஆம் திகதி புதிய தலைவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது. அப்போது கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர், தொழிற்சாலையின் வேலைப் பகுதி முகாமையாளர் ஆகியோரும் கூட இருந்தனர்.

அன்றைய சந்திப்பின்போது மேற்கொள்ளப்பட்ட ஏனைய முடிவுகள் சில வருமாறு:

★ 1991, 1992ஆம் வருடத்துக்குரிய சம்பள உயர்வு நிலுவை வழங்கப்படமாட்டாது.

★ இராணுவ நடவடிக்கை காரணமாக (ஷெல், குண்டு வீச்சுத் தாக்குதல்களால் உயிரிழந்த தொழிற்சாலை ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபம் வகை செய்யவில்லை. எனவே அது விடயமாக அந்த அமைச்சுடனேயே பேசவேண்டும்.

★ இளைப்பாறும்போது வழங்கப்படும் சேவைக்கான பணம் கணக்கிடப்படும்போது அமைய ஊழியராகப் பணிபுரிந்த காலமும் சேர்க்கப்படும்.

★ 25 வருடகாலம் சேவை புரிந்தவர்களுக்கான தங்கப் பதக்கங்கள் அரச அதிபர் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டு விநியோகிக்கப்படும்.

★ ஊழியர்கள் தமது சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை உரிய காலத்தில் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் விசேட உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும். (அ)

PERSONAL
NEW SCIENCE
CENTRE
JAFFNA.

PURE - APP.
Mr. குணசிங்கம்
B Sc. (Hons.)

94 A/L
புதிய பிரிவு
ஆரம்பம்
07-08-93
சனி 2 p. m.

(சி-5558)

### கழிவறை அமைக்க

# சிமெந்து உபகரணங்கள்; கூட்டுப்படை அனுமதி

யாழ்ப்பாணம், ஆக. 6

ஜேர்மன் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வுக்குரிய வேலைகளில் கழிவறைகள் அமைப்பதற்கு தேவையான, சிமெந்தினால் தயாரிக்கப்பட்ட உபகரணங்களை இங்கு எடுத்துவர கூட்டுப் படைகள் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப் பிரதிநிதிகள் மேற்படி உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு வேலைகளுக்கு தேவையான பொருள்களை கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்கான அனுமதியை கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திடம் கோரியிருந்தனர். (த-162)

# புதிய சமாதான முயற்சிகள் குறித்து தொண்டமான்

கொழும்பு, ஆக. 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் தனித் தனி சம்பவங்களை வைத்து தலையிட முடியாது.

அமைச்சர் தொண்டமான் இப்படி சொன்னார்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் அழிப்புக்குப் பின்னர் புதிய சமாதான முயற்சிகளில் ஈடுபடும் எண்ணம் உண்டா என்று ''சண்டே டைம்ஸ்'' செய்தியாளர் கேட்டதற்கு அவர் இப்படித் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு இ. தொ. கா. தமது யோசனைகளைத் தெரிவித்தது; விடுதலைப் புலிகளுக்கும் கொடுத்தது. இரு தரப்புமே சாதகமாகப் பதில் அளிக்கவில்லை. விடுதலைப் புலிகள் சாதகமான பதிலை அளித்து ஒரு பேச்சுவார்த்தையைக் கோருமானால் இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஒன்றைக் காண என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன்'' — என்றும் அவர் கூறினார். (த-எ)

# பிரதமர் ரணில், தளபதி சிசில் பலாலியில் மந்திராலோசனை

கொழும்பு, ஆக. 6

பலாலி இராணுவ முகாமில் கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினாவும் நடத்திய மந்திராலோசனை அரசியல் வட்டாரங்களில் பல விதமான கேள்விகளை எழுப்பியுள்ளன என்று கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்த மேகங்கள் தென்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இவர்களது மந்திராலோசனை முக்கியமானதாகக் கருதப்படுவதாகவும் —

இராணுவ தாக்குதல் நடவடிக்கைகள் குறித்தே அவர்கள் பேசியிருக்க வேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# மன்னாருக்கு பொருள்கள்; கட்டுப்பாடுகள் தளர்வு

கல்பிட்டியில் இருந்து மன்னார் தீவுக்கு ஒரு சில பொருள்களை பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதியின்றி எடுத்துச் செல்லலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2 சிறிய டோர்ச் பற்றறிகள் அல்லது சாதாரண பற்றறிகள், 5 கற்பூர பக்கட்டுகள், 3 சிறிய தீப்பெட்டிகள் மற்றும் சாப்பாட்டு பொருள்கள், பீங்கான் கோப்பைகள் எடுத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை—

24 வகையான பொருள்கள் கல்பிட்டியில் இருந்து மன்னாருக்கு எடுத்துச் செல்ல தொடர்ந்து தடைவிதிக்கப்பட்டுள்ளது. (த-3-162)

## தொடர்பு கொள்ளவும்

யாழ். மாவட்டத்தில் குழாய்க்கிணறு அடித்துக் கொடுப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் 06-08-93, 07-08-93, 08-08 93 ஆகிய தினங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

உட்கட்டுமானப் பகுதி
த. பொ. மே. கழகம்,
இல. 03, செம்பியன் லேன்,
கொக்குவில்.

(சி-5565)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் கனகாம்பரி பத்மநாதன் இன்னிசைக் கச்சேரி மாலை 6 மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15 — 6-15 ''சூதும் வாதும்'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ. வை நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் —

பிற்பகல் 2-3 மணிவரை ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' எனும் பொருளில் திரு. சிவ. மகாலிங்கம் சமயச் சொற்பொழிவு.

மாலை 5-30 — 6-30 மணிவரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''போர் முகாமில் பானுகோபன்'' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம். (க-111-126)

## உயர்கல்வி தொடர்பான கருத்தரங்கு

பாடசாலைகளில் இன்றைய உயர்கல்வி நிலை தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் ஞாயிறன்று முற்பகல் 9 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஜி சீ ஈ. சாதாரண, உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கள் ஆகியோரை அந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-5)

## கிராமிய தலைமைத்துவ பயிற்சி

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் ஆளுமையினை அபிவிருத்தி செய்யும் நோக்கமுடன் யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து கிராமிய தலைமைத்துவப் பயிற்சி நெறியை அளிக்கவுள்ளது.

சனசமூக நிலையங்களைச் சார்ந்த ஆர்வமுள்ள ஜி சீ ஈ. (சாதாரணம் வரை பயின்று உறுப்பினர்களான ஆண், பெண் இருபாலாரும் தத்தமது சனசமூக நிலையங்களின் ஊடாக இதற்கு விண்ணப்பிக்கலாம். (த-111)

## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீத சபை அறிமுறைத் தேர்வு - 1993

தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்ட மேற்படி தேர்வை 1993 - 09 - 04 (சனி), 1993 - 09 - 05 (ஞாயிறு) ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாடிகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் 1993 - 05 - 15 ஆம் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993 - 09 - 04 ஆம் திகதி சனிக்கிழமையும், 1993 - 05 - 16 ஆம் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993 - 09 - 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத் தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

(சி-5562)

CHEMISTRY

திரு செல்வா
B. Sc. (Hons)

புதிய பிரிவு ஆரம்பம்:
7 - 8 - 1993

7 a. m. — 95 A/L
8 a. m. — 94 A/L
9 a.m. — Revision

PHYSICS

திரு ரவீந்திரநாதன்
B. Sc. (Cey.),
Dip-in-Ed.

புதிய பிரிவு ஆரம்பம்:
7 - 8 - 1993

7a.m. — 94 A/L
8a.m. — Revision
9a.m. — 94 A/L
10a.m. — 95 A/L

Personal
New Science
Centre
Jaffna.

(சி-5559)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய வெள்ளைநிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் ஒன்றரை மாதம் நிரம்பியவை, பூச்சி நீக்கப்பட்டவை விற்பனைக்குண்டு இல. 81/1 (257), கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (26832)

ஓட்டுமடம் சந்தி அராலி றோட் அலுமினியம்பக்ரறிக்கு அருகில் 1½ பரப்பு காணி வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: J. யேசுதாசன், இல 3, முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (26837)

## மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 6 8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

## ஆண்டு 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறும் 1994 ஆவணி புலமைப் பரிசில் மாணவருக்கான தொடர் பயிற்சிப் பரீட்சையின் 4 ஆவது பரீட்சை 7-8-93 சனிக்கிழமை பி ப 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26818)

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் (1994) மாதிரிப்பரீட்சை 07-08-93 சனிக்கிழமை முற்பகல் 8-00, 11-00 மணி நேரங்களில் நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26808)

## ஆனந்தம்

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சியாக்காய்ப்பவுடர் பேன், சொடுகு, அழுக்கு அகற்றி, குளிர்ச்சியானது. சுகாதாரத்திற்கு சிறந்தது. ஐந்து நிமிடம் வெந்நீரில் ஊறவிட்டு பாவிக்கவும். இடைக்குமிடம்: ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம் - சாவகச்சேரி, திருவருள் களஞ்சியம்- கொடிகாமம், திரு. மு. சச்சிதானந்தம் வியாபாரிமூலை, பருத்தித்துறை. ஸ்ரீகணேஸ் ஸ்ரோர்ஸ், லீலாவதி ஸ்ரோர்ஸ் கைதடி. (சி-5639)

## ஆண்டு - 3 வகுப்பு

ஆண்டு 3இற்கு சகல பாடங்களும் யாழ் முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளன. புலமைப்பரிசில் (1995)ற்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 7-8-93 சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணி. இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26809)

## தேவை

G. C E. A/L கணக்கியல் படித்தவரும், தமிழ், ஆங்கில தட்டச்சு வேலை தெரிந்தவருமான பெண் லிகிதர் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். கு. வி. அச்சகம் புத்தக விற்பனை நிலையம், 217 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6400)

## காணவில்லை

கறுப்பு நாம்பன் முகத்தில் வெள்ளையுடன் 'ப' குறியும் இரண்டு கோடுகளும் உண்டு. கறுப்பு பசு 'BV' குறியுள்ளது. 01-08-93 இரவு முதல் காணவில்லை. இவை பற்றிய தகவல் தெரிந்தவர்கள் எம். எஸ். வின்சன்ற், இல: 10, இராசேந்திரா வீதி, குருநகர் என்ற விலாசத்திற்கு அறிவித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (26831)

## ஆண்டு - 5 பரீட்சை

எம்மால் நடத்தப்படும் புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சிப் பரீட்சையின் இறுதிப் பரீட்சை 7 - 8 - 1993 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெறவிரும்புவோர் பெற்றுக் கொள்ளலாம் எடிசன் அக்கடமி. யாழ். இந்து அருகில், கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (26817)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கஸ்தூரியார் றோட்டில் புனிதா கடைக்கு முன்பாக ஒரு சைக்கிள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டி யோகாஸ் ஆடையகம். 16, பெரியகடை, யாழ்ப்பாணம். மேற்படி விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும். (26825)

## தவறிவிட்டது

30-7 93 அன்று பஸ்ஸில் செல்கையில் மானிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையில் மகேந்திரன் விக்னேஸ்வரியின் அடையாள அட்டையுடன், முக்கிய ரசிதுகள் கொண்ட பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ம. விக்னேஸ்வரி, இணுவில் றோட், சுதுமலை வடக்கு, மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். (26833)

கி. தயானந்தனின் அடையாள அட்டை 5 8 93 அன்று யாழ். இந்துக்கல்லூரிக்கும் சட்டநாதர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். இந்துக்கல்லூரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (26836)

## விஞ்ஞானம் O/L

அலகு ரீதியான மாதிரி வினா-விடை வகுப்பு 6-8-93 (காலை 6-00 மணி) ஆரம்பம் ஞாயிறு சனிக்கிழமைகளில் காலை 6-00 மணிக்கு வகுப்புக்கள் நடைபெறும். ஆசிரியர் J J. கொலின்ஸ். வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதா கோவில் அருகில் (சோமா வீதி), உயரப்புலம், ஆனைக்கோட்டை. (26830)

## வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூபா 6/- வேப்பம் பழம் காய்ந்த கோது கிலோ ரூ 2/- மில்க்வைற். (சி-5560)

## சியாக்காய் பவுடர்

காவேரி சியாக்காய் பவுடர் திருநெல்வேலி சந்தையில் கிடைக்குமிடம் கணேஸ் களஞ்சியம், மணியம் வர்த்தக நிலையம், பலாலி றோட், சிவன் ஸ்ரோர்ஸ் (பரமேஸ்வராசந்தி). (26776)

---

கணபதி துணை

அச்சுவேலி பத்தமேனி அருள்மிகு

### தீர்த்தாங்குளப் பிள்ளையார்

## வருடாந்த மஹோற்சவம்

8 8-1993 (ஞாயிறு) பகல் 10 மணி கொடியேற்றம்; தொடர்ந்து 9ஆம் நாள் தேர்த்திருவிழாவும், 10ஆம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெற விநாயகப் பெருமான் அருள் பாலித்துள்ளார்.

— மேற்படி தேவஸ்தானம்.

அன்பளிப்பு:

செல்வராஜா அன்ட் கோ,
சன்னதி றோட், அச்சுவேலி.

(6401)

---

சில்லாலை

## புனித கதிரைமாதா ஆலய திருவிழா

மேற்படி ஆலயத் திருவிழா இவ்வருடம் ஆவணி மாதம் 6ஆம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12, 13, 14ஆம் திகதிகளில் பிற்பகல் 4-00 மணிக்கு திரிதின திருப்பலி ஆராதனை நடைபெற்று, 15 ஆம் திகதி காலை 7-00 மணிக்கு திருவிழா திருப்பலி நிறைவேற்றப்படும்.

பங்கு சபை;

[26813] புனித கதிரைமாதா ஆலயம்.

---

## யாழ்ப்பாண பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் - 1994

G. A. Q; Ist in Com.

பொருளியல்

**S. வரதராஜன்**
B. A. (Hons)

பிரிவு I சனி, ஞாயிறு 5 00 — 6:00 p. m.
பிரிவு II செவ். வியாழன் 6-30 — 7-30 a.m.

ஆரம்பம்: 07 - 08 - 1993
சனி 5 : 00 p. m.

பேராதனைப் பல்கலைக்கழக B. A. பொருளியல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5641)

---

## நன்றி நவிலல்

### சபாபதி வல்லிபுரநாதன்

(ஓய்வுபெற்ற பணிப்பாளர் - கட்டடத் திணைக்களம்)

மறைந்த எனது அன்புக் கணவர் சபாபதி வல்லிபுரநாதனின் மரணச்செய்தி கேட்டு எமது யாழ் இல்லத்திற்கு வந்து அனுதாபங்கள் கூறிச் சென்ற அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Mrs. R. Vallipuranathan,
No. 50, Vendervert Place,
Dehiwala.

தகவல்:
திருமதி R. கணபதிப்பிள்ளை,
No. 51. அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(26829)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

பூமியாகமம்; 26 — 09 — 1947



ஸ்வர்க்க சங்கமம் : 06 — 08 — 1988

திருமதி

### லீலாவதி குகபாலன் (இராசாத்தி)

(ஆசிரியை)

திதி: 12 - 08 - 1993

''நாதம் தந்த வீணை
நரம்பிழந்து போனது போல்
ஓசை தந்த மணி
ஒலியிழந்து போனது போல்
வாசம் தந்த மலர்
வாடியே போனது போல்
பாசம் தந்த வளே
பாதியிலே போயினையோ?

கணவன், தந்தை, சகோதரி,
சகோதரர்கள், பெறாமக்கள்,
மருமக்கள், மாமியார் குடும்பத்தினர்,
நண்பர்கள்,

36, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(26835)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# இந்திரா காங்கிரஸ்-அ.தி.மு.க தொண்டர்கள் மோதல்!

## எம். எல்- ஏக்கள் உட்பட 270 பேர் கைது

சென்னை, ஆக. 6

தமிழ்நாடு, சிதம்பரனார் மாவட்டத்தில் இந்திரா காங்கிரஸ் தொண்டர்களுக்கும் அ.தி.மு.க. தொண்டர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ ஒருவரும், அ. தி. மு. க எம். எல். ஏ மூவரும் உட்பட இரு கட்சிகளையும் சேர்ந்த 270 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது.

சிதம்பரனார் மாவட்டம்—சாத்தான்குளத்தில் குடிதண்ணீர் வழங்கக் கோரியும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கக் கோரியும் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ குமரி அனந்தன் தலைமையில் காங்கிரஸ் தொண்டர்கள் வீதி மறியல் செய்ய முயன்றனர். இவர்களின் போராட்டத்துக்கு எதிராக அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் செல்வத்துரை, ரமேஷ், ராஜமன்னார் தலைமையில் அ. தி. மு. கவினர் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இதனை அடுத்து இரு பிரிவுகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது கல்வீச்சும் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட எம். எல். ஏக்களும் தொண்டர்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். (இ-எ)

## மண்எண்ணெய் முத்திரை; பெறுமதி அதிகரிக்கப்பட்டது

அம்பாறை, ஆக. 6

வறுமை நிவாரண உணவு முத்திரையின் மண்எண்ணெய்க்கான முத்திரையின் பெறுமதியை சமூக சேவைகள் திணைக்களம் அதிகரித்துள்ளது.

மண்எண்ணெய் முத்திரையின் பெறுமதி 29 ரூபாவில் இருந்து தற்பொழுது 44 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து வறுமை நிவாரண மண்எண்ணெய் முத்திரையின் அதிகரிப்பு அமுலுக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக கொழும்பு சமூக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது

நேற்று முன்தினமே இந்த அறிவிப்பு யாழ். செயலகத்துக்கு கிடைத்தது என்றும்—

மண்எண்ணெய் முத்திரையின் புதிய அதிகரிப்புக்கு அமையவே உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ். செயலக சமூக சேவைகள் பகுதி அறிவித்துள்ளது. (த-17)

## ஆசிரியர்களுக்கு வீடமைப்பு கடன்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனத்தினரால் ஆசிரியர்களுக்கான வீடமைப்புக் கடன் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

ஆசிரிய சேவையில் உள்ளவர்கள் தமக்கென புதிய ஒரு வீட்டை வாங்கிக்கொள்ளவோ அல்லது புதிதாக ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளவோ, வீடு கட்டும் நோக்கத்துடன் காணியொன்றைக் கொள்வனவு செய்யவோ, குறையாக கட்டி முடித்த வீட்டை பூரணமாக்கிக் கொள்ளவோ இலகுகடன் திட்டமாக இது அமைந்துள்ளது. (த-152)

## வங்கிகளில் பணி புரியும்
## சமயாசமய - சிற்றூழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

கொழும்பு, ஆக 6

இலங்கை வங்கி. மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் பல ஆண்டுகளாக சமயாசமய அடிப்படையில் பணிபுரிந்து வரும் சிற்றூழியர்கள் இவ்வருட இறுதிக்குள் பெரும்பாலும் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''த ஐலண்ட்'' இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது. சுமார் 300 பேர் இவ்வாறு நிரந்தரமாக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## உதயன்

## திடீர் மாற்றம் எதற்காக?

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் சர்வதேச உதவியைக் கோரவுள்ளதாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கூறியுள்ளார்!

இன்றைய கொதிக்கும் விவகாரமான இனப்பிரச்சினை என்பது உண்மையில் தமிழர் பிரச்சினையே.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களை எல்லாம் தவறவிட்டு விட்டு, இப்போது சர்வதேச உதவியை நாடும் கட்டத்துக்குச் சிறிலங்கா தலைவர்கள் வந்திருக்கிறார்கள்! தாம் பலசாலிகள்; எண்ணிக்கையில் அதிகமானோர்; அதனால் தமிழர்களை அடிமை நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற மமதையுடன் இதுவரை செயற்பட்டார்கள். இன்று பிரச்சினையைத் தம்மால் தீர்க்க முடியாது என்று உணர்ந்து சர்வதேச உதவியைக் கோருகிறார்கள்!

தமிழர் பிரச்சினை உள்நாட்டு விவகாரம். இங்கே நடப்பது உள்நாட்டுப் போர். அவற்றை நாங்களே தீர்த்துக் கொள்வோம். இதில் வெளியார் எவரும் தலையிடத் தேவையில்லை. தலையிட அனுமதியோம் என்று ஒரு காலத்தில் கூறியவர்கள் சிங்களத் தலைவர்கள்! இன்று இப்பிரச்சினை தங்களால் கையாளப்பட முடியாத ஒன்று, தமது கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிட்டது என்று உணர்கிறார்களா?

புதிய ஜனாதிபதி விஜேதுங்கா பதவிக்கு வந்த புதிதில் நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே தீர்க்கப்பட வேண்டியது என்று கூறினார். ஆனால் இப்போது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச உதவியைக் கோருகிறார்.

இந்த மாற்றத்துக்கு உள்ளார்ந்த காரணங்கள் பலவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சிங்களவர்களுக்குச் சார்பான ஒரு தீர்வைத் தமிழர் மீது திணிக்கக்கூடிய நாடுகளை மத்தியஸ்தர்களாக அல்லது சமரசம் செய்பவர்களாகக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு ஸ்ரீலங்கா அரசுக்குக் கிடைத்திருக்க வேண்டும். அதனைச் சிக்கெனப் பற்றிக்கொண்டால் தமக்குச் சாதகமான ஒரு முடிவை சர்வதேச சமரசம் என்ற பெயரில் எய்தலாம் என்று கருதுகிறார்கள் போலும்!

ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் இந்திய உதவியை நாடியும் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை என்ற அனுபவத்தைச் சிங்களத் தலைவர்கள் மறந்திருக்கமுடியாது. யுத்தம் தொடங்கிய கடந்த மூன்று வருட காலத்தில் கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள் சமரசம் செய்ய விருப்பம் தெரிவித்திருந்தன. ஆனால் பிரேமதாசா அவற்றைக் கண்டும் காணாதவராக விட்டுவிட்டார். தமிழர் தரப்பினர் ஐ. நா. தலையீட்டுக்கு ஆதரவு தேடி வருவதாகக் கூறி அதற்குக் கண்டனமும் தெரிவிக்கப்பட்டதும் உண்டு.

இப்போது, திடீரென சர்வதேச உதவியை நாடும் அளவுக்கு அரசின் மனநிலை மாறி இருப்பது ஏன்? சோழியன் குடுமி சும்மா ஆடுமா? அவர்களுக்குச் சார்பான சமிக்ஞை ஒன்று கிடைத்திருக்கிறது போலும்!

அல்லது சர்வதேச உதவி என்ற பெயரில் மீண்டும் வெளியார் படைகளை அழைத்துத் தமிழரை அடக்கும் எண்ணமோ?!

## நாளை

''செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டுகள்'' என்ற பொருளில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று, நாளை சனி முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பிரிவு அல்லாரை தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும். (த)

o o o

யாழ். நாவலன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் மாதாந்த அறிவியலரங்கு தொடர்—14, நாளை மாலை 6.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. இ. அரசகுலசூரியன் தலைமையில் இடம்பெறும்.

ஓய்வுபெற்ற கல்வியதிகாரி கலாநிதி ஆ. சின்னத்தம்பி ''வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் தத்துவம்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். (உ-30)

o o o

பகவான் ஸ்ரீ நீலகண்ட பாபாவின் 59 ஆவது ஜெயந்தி தினம் நாளை சனிக்கிழமைபிற்பகல் 4 மணிக்கும் அத்வைத வேதாந்த சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறும். (த)

o o o

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ நூற்றாண்டு நிகழ்ச்சியை ஒட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்படும். கண் வைத்திய நிபுணர் டாக்டர் சி. அருணாசலத்தினால் நடத்தப்படும் இம்முகாமில் சேவாச்சிரமத்தில் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் சிகிச்சை அளிக்கப்படும். (த)

# அபிவிருத்தி பணிகளை பார்வையிட தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள்

## வெகுவிரைவில் யாழ் வருவர்

யாழ்ப்பாணம், ஆக. 6

வடக்கில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு இத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் வெகுவிரைவில் இங்கு வரவுள்ளனர்.

யுனிசெப், ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு, இலங்கை கனடா அபிவிருத்தி நிதியம், நோராட், யு எஸ். எயிட்., யு. என். டி. பி., எல்விற்றாஸ் ஆகிய தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளே இங்கு வரவுள்ளனர்.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் மேற்படி நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியிருந்தனர். வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நேரில் பார்வையிடும் படி அப்போது அவர்களிடம் கோரிக்கை விடப்பட்டது

இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

இதனையடுத்து யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் காரணம் காட்டி அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க தயக்கம் காட்டிய தொண்டர் நிறுவனங்கள் தற்போது தமது கருத்தை மாற்றிக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-162)

## ஆசிரியர்களை விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம் ஆக. 6

1985 ஆம் ஆண்டுக்கு முன் ஆசிரிய பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இதுவரை சித்தி அடையாத ஆசிரியர்களை சம்பந்தப்பட்ட ஆசிரிய கலாசாலையூடாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சித்தி பெறாத ஆசிரியர்களுக்கு சேவை அடிப்படையில் பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கப்படவுள்ளதாக ஆசிரிய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-5)



## நாளும் அருள்புரிவாய்!

இராகம்: ஹம்சத்வனி — தாளம்; ஆதி

எடுப்பு

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனே
இல்லை யெனாது வரமீந்தருள் புரிவாய்
—தொல்லை

தொடுப்பு

கல்லையொத்த மனமும் கசிந்துருகச் செய்யும்
தில்லைச்சிவன் மகனே திருவருள் புரிந்திடுவாய்.
—தொல்லை

முடிப்பு

எல்லையில்லா அழகு இன்பவள்ளிக் கணவர்
நல்லையிலே அமர்ந்து நாளும் அருள் புரிவாய்
இல்லையினித் துன்பம் முருகா முருகா வெனும்
சொல்லை மறந்திடாதே தொலைந்திடும்-
வினைகளெல்லாம்.
—தொல்லை

—இராசையா ஸ்ரீதரன்

**மண்ணும் மரமும் பிரியாதது போல்**
**மரமும் மனிதனும் பிரியாதவையே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தி வரும் 7பேர் கொண்ட அணிகளுக் கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளி மாலை கொழும்புத் துறை இந்து ம. வி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ 3-00மணி: பங்கிராசர் வி. க. எதிர் சத்தியா வி. க. அணி

★ 3-45 மணி: கொய்யாத்தோட்ட வி. க. எதிர் பாரதி ச. ச. நிலைய அணி

★ 4-30 மணி; அரியாலை ச. ச. நிலைய அணி எதிர் யாழ். பல. நோ. கூ. ச. அணி (த-27)

## சிவானந்த குருகுல பரிபாலனசபையின்
## 9 ஆவது சிவாகம ஆய்வுக் கருத்தரங்கு

நடைபெறும் இடம்: தர்மசாஸ்தாகுருகுலம், இணுவில்.

காலம்: 08-08-1993 ஞாயிறு மாலை 2.00 மணி

விடயம்: துவஜாரோஹண கிரியைகள்

துவஜாரோஹணம் பற்றிய கிரியைகள் அதன் தத்துவங்கள், பிரமாணங்கள் பற்றி கலந்துரையாடி தெளியவும், ஒருமுகப்படவும் ஆரம்ப நிலையாக இக் கூட்டம் கூட்டப்படுகிறது.

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்,
சிவானந்த குருகுல பரிபாலனசபை.

(6616)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 28 — 05 — 1917



மறைவு: 07 — 07 — 1993

### கார்த்திகேசு சுப்பிரமணியம்
(பொளிச்சி மணியம்)
(பிரபல சுருட்டு வியாபாரி)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எங்களை அன்போடும், பண்போடும் வளர்த்து, நல்வழி காட்டி வாழவைத்த தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாத காலமானாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மாறாது! மறையாது!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

"இலட்சுமி இல்லம்",
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். [26838]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 6-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## மடுமாதா உற்சவம்

வடமராட்சி, ஆக 6

மடுமாதா தேவாலயத்தின் ஆவணி வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி இடம் பெறும். (த-173)

## கருத்தரங்கு நடைபெறாது

யாழ்ப்பாணம், ஆக. 6

மருதனார்மட கோட்ட இசை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கை நாளை சனிக்கிழமை நடத்தத் திட்டமிடப்படவில்லை என்றும் —

ஜி.சி.ஈ உயர்தர பரீட்சை நடைபெறுவதால் கருத்தரங்கை நடத்தும் சாத்தியம் இல்லை என்றும் —

உதவிக் கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்) திரு. சு. கணபதிப்பிள்ளை அறியத்தருகிறார். (அ)

### அரசின்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணிக்கவாசகர் இம்மாதம் இரண்டாம் திகதி கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்குத் தகவல் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### உணவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தம் 18 பேர் சுகவீனமுற்றனர் என்றும் —

கடுமையாகப் பாதிக்கப்பட்ட 8 பேரே யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் —

ஏனையோர் சங்கானை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### ஹமில்டனுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளோம். அரசும், பாதுகாப்பு அமைச்சும் எமது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

யுத்தக் கைதி எச். எம். பியரட்ண நேற்று "புலிகளின் குரல்" வானொலிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். [இ-5]

### சிப்பாய் --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் நடத்திய 'சினைப்பர்' தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

"புலிகளின் குரல்" வானொலி இதனை வெளியிட்டது. [இ-5]

### கறுப்பு உடை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்புக்கு முதலில் கொண்டு வரப்பட்டது.

எனினும் இப்படை மட்டக்களப்பில் தொடர்ந்து நிலை கொண்டுள்ளது.

இதே வேளையில் ஜனாதிபதி நடமாடும் செயலகத்தை முன்னிட்டு பாதுகாப்புக் காரணங்களுக்காக பல கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டனர்.

படை முகாம்களை சுற்றி இருந்த காடுகளும் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## வாகன பதிவு பற்றி அறிவிப்பு

கோப்பாய், உடுவில் ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் செயற்பாட்டின் மூன்றாம் கட்ட நடவடிக்கை எதிர் வரும் 14 ஆம் திகதியுடன் நிறுத்தப்படவுள்ளதாகவும்—

இதுவரை தமது வாகனங்களை பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடன் அவற்றைப் பதிவு செய்து கொள்ளுமாறும் மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். [இ-5]

### உண்ணாவிரதத்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கா. மாணிக்கவாசகர் நாளை யாழ்ப்பாணம் வந்து சேரும் வரை உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு வனசிங்கா தமது கடிதத்தில் கேட்டிருப்பதாக யுத்தக் கைதிகள் தெரிவித்தனர்.

தீர்க்கமான ஒரு முடிவு கிடைக்கும் வரை தாம் உண்ணாவிரதத்தை நிறுத்தப் போவதில்லை என்றும்—

எனினும் ஹமில்டனின் கடிதத்துக்கு மதிப்பளிக்கும் விதத்தில் நீர் அருந்துவதற்கு முடிவு செய்திருப்பதாகவும்— யுத்தக் கைதிகள் தெரிவித்தனர்.

முயற்சி

இதேவேளை, கொழும்பில்— தற்போது உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் பொலீஸாரையும் இராணுவச் சிப்பாயையும் விடுவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு இன்னமும் முயற்சி எடுத்து வருகிறது— என்றும் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் நேற்று நடந்த வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், யாழ்ப்பாண அரச அதிபர் ஆகியோர் உட்பட இயன்ற சகல வட்டாரங்கள் மூலமும் உண்ணாவிரதமிருந்து வரும் பொலீஸாரையும் இராணுவ சிப்பாயையும் விடுவிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்— அவர் கூறினார். (அ-எ-5)

## மரண அறிவித்தல்கள்

### கனகரத்தினம் யசிந்தன்
(கைதடி கிழக்கு)

கனகரத்தினம் யசிந்தன் 5-8-93இல் காலமாகிவிட்டார். இவர் கைதடி கிழக்கு திர்வேலன் அரிசி ஆலை, கனகரத்தினம் சத்தீஸ்வரி தம்பதிகளின் இளைய மகனும், கம்சிகா, சயந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம்பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்:
க. சத்தீஸ்வரி
(தாயார்)

கைதடி கிழக்கு
கைதடி. (26834)

### செல்வி பவுலீனா பேதுருப்பிள்ளை

நாரந்தனை தெற்கை பிறப்பிடமாகவும், குருநகர் 6 ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட பவுலீனா பேதுருப்பிள்ளை அவர்கள் 5-8-93 இல் காலமாகிவிட்டார்.

இவர் பேதுருப்பிள்ளை (ஆசிரியர், வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்) - மரிஸ்ரெலா ஆகியோரின் அன்பு புதல்வியும், டொறின் கிருபானந்தன் (கிருபா) எமில், ஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை (6-8-93) மாலை 3.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. பேதுருப்பிள்ளை
(தந்தை)

இல 8, 6 ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். (26845)

### இளையதம்பி முத்தையா
(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

காங்கேசன்துறையைபிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி முத்தையா 05 08-93 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, முருகேசு, நாகம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மா. நமசிவாயம்
(மருமகன்)

ஏழாலை மேற்கு
நாவலடி,
ஏழாலை. (26846)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org